பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4

10 08 2025 SUNDAY 12 40 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மூன்று புதிய வந்தேபாரத் ரயில் சேவைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி பெங்களூருவில் இன்று தொடங்கி வைத்தார்.

2. ஃபிட் இந்தியா இயக்கம், நாட்டு மக்களிடையே உடல் உறுதி குறித்த விழிப்புணர்வை மிகப் பெரிய அளவில் ஏற்படுத்தி வருவதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

3. முப்படைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பின் வலிமையை வெளிக்காட்டுவதற்கான சான்றாக ஆப்பரேஷன் சிந்தூர் விளங்குவதாக முப்படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் தெரிவித்துள்ளார்.

4. பங்களாதேஷ் இடைக்கால தலைவர் மொஹமது யூனுஸ் தலைமையிலான அரசில் அங்கம் வகிக்கும் 8 ஆலோசகர்கள் ஊழலில் ஈடுபட்டு வருவதாக அந்நாட்டின் முன்னாள் அரசு செயலாளர் திரு. A.V.M. Abdus Sattar குற்றம் சாட்டியுள்ளார்.

5. ஆசிய அலைச்சறுக்கு போட்டியில் இந்தியாவின் ரமேஷ் புடிஹால் வெண்கலப்பதக்கம் வென்ற வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

>>>>>><<<<<<

மூன்று புதிய வந்தேபாரத் ரயில் சேவைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி பெங்களூருவில் இன்று தொடங்கி வைத்தார்.

பெங்களூரு – பெலகாவி, மாதா வைஷ்ணவ் தேவி கத்ரா - அம்ரிட்ஸர், நாக்பூர் – புனே இடையேயான வந்தேபாரத் ரயில்களை பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, பொம்மனஹள்ளி மற்றும் எலெக்ரானிக் சிட்டியை இணைக்கும் மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

பின்னர், பெங்களூரு மெட்ரோ ரயில் மூன்றாம் கட்டப் பணிகளுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

>>>>>><<<<<<

ஃபிட் இந்தியா இயக்கம், நாட்டு மக்களிடையே உடல் உறுதி குறித்த விழிப்புணர்வை மிகப் பெரிய அளவில் ஏற்படுத்தி வருவதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஞாயிறு தோறும் சைக்கிள் பேரணி நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அமைச்சர், 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த உள்ளாட்சி பிரதிநிதிகள் இப்பேரணியில் பங்கேற்றதன் மூலமாக நாடுமுழுவதும் உடல் உறுதி தொடர்பான விழப்புணர்வு வலுப்பெற்று வருவதாக கூறினார்.

> > > > > > < < < < < <

அர்மேனியா – அஜர்பைஜான் இடையே அமைதி உடன்படிக்கை ஏற்பட்டுள்ளதற்கு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அர்மேனிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Ararat Mirzoyan-ஐ தொடர்பு கொண்டு தாம் பேசியதாக அவர் தமது சமூகவலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, வாஷிங்டனில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தை வரலாற்று சிறப்புமிக்க தருணம் என்று அர்மேனிய அமைச்சர் திரு. Ararat Mirzoyan கூறினார்.

அர்மேனியாவின் இளைய தலைமுறைக்கு அமைதி மற்றும் சிறப்பான எதிர்காலத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த உடன்பாடு அமையும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

> > > > > > < < < < < <

உலக சிங்கங்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

சிங்கங்களின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த குஜராத் மாநிலம், சௌராஷ்ட்ராவில் உள்ள 11 மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குஜராத்தின் பர்தா வனவிலங்கு சரணாலயத்தில் அம்மாநில வனத்துறை சார்பாக இந்நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் மற்றும் குஜராத் முதலமைச்சர் திரு. பூபேந்தர் பட்டேல் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு. புபேந்தர் யாதவ், ஆசிய சிங்கங்களின் தாயகமாக இந்தியா விளங்குவதாக தெரிவித்தார்.

இது நாட்டிற்கு பெருமை அளிக்கக்கூடியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த சில ஆண்டுகளாக சிங்கங்களின் எண்ணிக்கை சீராக அதிகரித்து வருவதாகவும், 2015ஆம் ஆண்டு 523ஆக இருந்த சிங்கங்களின் எண்ணிக்கை தற்போது 891 ஆக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

சிங்கங்களை பாதுகாக்கும் முயற்சிகளுக்கு மக்கள் துணைநிற்க வேண்டும் என்றும் திரு. பூபேந்தர் யாதவ் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

நாரி அதாலத் எனும் பெண்கள் நீதிமன்றத்தை சிக்கிமில் அம்மாநில முதலமைச்சர் திரு. பிரேம்சிங் தமாங் இன்று தொடங்கி வைத்தார்.

அன்னைக்கு மரியாதை தினம் முதல்முறையாக கொண்டாடப்படுவதை ஒட்டி, Rongpo-வில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இதனை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

கிராமப்புறங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், பெண்களால் நிர்வகிக்கப்படும் நீதிமன்றமாக இது திகழும் என்று அவர் தெரிவித்தார்.

குடும்ப வன்முறை மற்றும் திருமணப் பிரச்சினைகளுக்கு வழக்கமான நீதிமன்றங்களுக்கு மாற்றாக, பேச்சுவார்த்தை மற்றும் சமரசம் மூலம் தீர்வு காண பெண்கள் நீதிமன்றம் உதவும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

நாட்டின் முப்படைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பின் வலிமையை வெளிக்காட்டுவதற்கான சான்றாக ஆப்பரேஷன் சிந்தூர் விளங்குவதாக முப்படைகளின் தலைமைத் தளபதி ஜென்ரல் அனில் சௌஹான் தெரிவித்துள்ளார்.

செகந்திராபாதில் உள்ள பாதுகாப்பு மேலாண்மை கல்லூரியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட ஒருங்கிணைப்பு உத்திகளை பகிர்ந்து கொண்டார்.

எதிர்காலத்தில் முப்படைகளும் கூட்டாக சேர்ந்து செயலாற்றுவதற்கான அம்சங்கள் ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் கிடைக்கப் பெற்றிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சுயசார்பு இந்தியா இயக்கத்தை வலுப்படுத்தும் வகையில், உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் பாதுகாப்பு தளவாடங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் அவசியத்தை ஜென்ரல் அனில் சௌஹான் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

பங்களாதேஷ் இடைக்கால தலைவர் மொஹமது யூனுஸ் தலைமையிலான அரசில் அங்கம் வகிக்கும் 8 ஆலோசகர்கள் ஊழலில் ஈடுபட்டு வருவதாக அந்நாட்டின் முன்னாள் அரசு செயலாளர் திரு. A.V.M. Abdus Sattar குற்றம் சாட்டியுள்ளார்.

டாக்காவில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், அந்த ஆலோசகர்கள் ஊழலில் ஈடுபட்டதற்கான ஆதாரங்களை வழங்க தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

முக்கியமான பணிநியமனம் மற்றும் பணியிட மாற்றங்களில் அந்த ஆலோசகர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. A.V.M. Abdus Sattar கூறினார்.

>>>>>><<<<<<

திமுக தேர்தல் நேரத்தில் அளித்த பெரும்பாலான வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு கூறியுள்ளார்.

திருச்சி, பஞ்சபூரில் தாழ்தள பேருந்து சேவையை தொடங்கி வைத்துப் பேசிய அவர், துப்புரவு தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் சலுகைகளில் மாற்றம் இராது என்றும்,

சென்னையில் துப்புரவு தொழிலாளர்கள் போராட்டம் சுமுகமாக முடிவடையும் என்றும் தெரிவித்தார்.

> > > > > > < < < < < <

ஜம்மு கஷ்மீரின் கிஸ்துவார் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே சண்டை நடைபெற்று வருகிறது.

அப்பகுதியில் தீவிரவாதிகளின் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த உளவுத் தகவலின் அடிப்படையில் பாதுகாப்புப் படையினர் அங்கு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும், அப்போது இருதரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் நீடித்து வருவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

> > > > > > < < < < < <

தாய்லாந்து – கம்போடியா எல்லைப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட 3 தாய்லாந்து வீரர்கள் கண்ணிவெடி தாக்குதலில் காயமடைந்திருப்பதாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்நாட்டு ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டங்களை மீறி இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தாய்லாந்து ராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

இதற்கிடையே, இந்த தாக்குதலுக்கும் தங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று கம்போடிய அரசு தெரிவித்துள்ளது.

> > > > > > < < < < < <

ரஷ்யா - யுக்ரைன் இடையே போர் நிறுத்தம் ஏற்பட இருநாடுகளும் இடம் பரிமாற்றத்தில் ஈடுபடலாம் என்ற அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்பின் கருத்தை நிராகரிப்பதாக யுக்ரைன் அதிபர் திரு. Volodymr Zelensky தெரிவித்துள்ளார்.

உண்மையான போர் நிறுத்தத்தை யுக்ரைன் விரும்புவதாகவும், இதற்கு மாற்றாக நாட்டின் எந்த பகுதியையும் விட்டுக் கொடுக்க தயாராக இல்லை என்றும் அவர் கூறினார்.

போர் நிறுத்தம் தொடர்பாக, ஐரோப்பிய மற்றும் யுக்ரைன் நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள், அமெரிக்க துணை அதிபர் திரு. J.D.Vance-யை சந்தித்தது ஆக்கபூர்வமாக அமைந்தது என்று யுக்ரைன் அதிபர் குறிப்பிட்டார்.

யுக்ரைன் பங்களிப்பு இல்லாமல், வரும் 15ஆம் தேதி அலாஸ்காவில் நடைபெறும் அமெரிக்கா – ரஷ்யா இடையேயான பேச்சுக்கள் இவ்விவகாரத்தில் எந்தவொரு விளைவையும் ஏற்படுத்தாது என்று திரு. Volodymr Zelensky தெரிவித்தார்.

> > > > > > < < < < < <

பிரேஸில் அதிபர் திரு. லூயிஸ் இன்னாசியோ லூலா டா சில்வா, ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

யுக்ரைன் உடனான சமீபத்திய போர் நிறுத்த முயற்சிகள் குறித்தும், அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் பேச்சுவார்த்தை குறித்தும் அப்போது திரு. புட்டின் எடுத்துரைத்ததாக பிரேஸில் அதிபர் தெரிவித்துள்ளார்.

> > > > > > < < < < < <

ஆசிய அலைச்சறுக்கு போட்டியில் இந்தியாவின் ரமேஷ் புடிஹால் வெண்கலப்பதக்கம் வென்ற வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் இன்று நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் பிரிவு இறுதிச்சுற்றில் 12 புள்ளி ஆறு புள்ளிகளை பெற்று அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

> > > > > > < < < < < <

பீகாரில் நடைபெற்று வரும் 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய Rugby போட்டியின் மகளிர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது

> > > > > > < < < < < <

20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச்சுற்று போட்டியில் இந்தியா இன்று மியான்மரை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

*துரந்த் கோப்பை கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் Neroca FC – Real Kashmir* அணியையும், *East Bengal – Indian Airforce* அணியையும் எதிர்கொள்கின்றன.

>>>>>><<<<<<